# வாக்குமூலம்
# தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.
# வழக்கு எண் : SC.No.495/2023
# வழக்கு சாட்சி PW-4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வடிவேல் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of June 10th, 2025.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் சுரண்டையில் குடியிருந்து வருகிறேன். நான் எலக்ட்ரீசியன் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். 18.06.2019 ம் தேதி, இரவு சுமார் 08.30 மணியளவில் அ.சா.1 ன் வீட்டின் அருகே எலக்ட்ரீசியன் வேலை செய்து கொண்டிருந்தேன். அப்போது சத்தம் கேட்டது. எதிரி அ.சா.1 ஐ தேவடியா சிறுக்கி, பலபட்டறை என்று கெட்ட வார்த்தைகளால் பேசினார். ரூபாயை எனக்கு திருப்பி தராவிட்டால் உன்னை வெட்டி கொன்று விடுவேன் என்று சொல்லி விட்டு, அரிவாளால் அ.சா.2 வசந்தாவை வெட்ட அவர் அதை வலது கையால் தடுத்தபோது வலது கையில் வெட்டுப்பட்டு ஒரு விரல் தொங்கி விட்டது. பின்னர் மீண்டும் மாறி, மாறி வெட்டியதில் அவருக்கு கழுத்து, தலை மற்றும் முழங்கைகளில் காயங்கள் ஏற்பட்டது. எதிரி நாங்கள் சத்தம் போடவும் இருசக்கரவாகனத்தில் ஓடி விட்டார். பின்னர் ஆம்புலன்ஸ் மூலம் காயம்பட்டவரை சிகிச்சைக்கு

மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> –

எனது வீட்டிற்கும், அ.சா.2 காயம்பட்டவர் வீட்டிற்கும் அரை கிலோ மீட்டர் தொலைவிருக்கும். அ.சா.1, அ.சா.2 ன் மகன். சாட்சி கவின் அ.சா.1 ன் சித்தப்பா பையன் என்றால் சரிதான். சாட்சி பால்ராஜ் அ.சா.1 ன் உடன்பிறந்த சகோதரர் என்றால் சரிதான். சாட்சிகள் அனைவரும் எனது உறவினர்கள் என்றால் அவர்கள் எனது ஊர்க்காரர்கள் மற்றும் ஒரே ஜாதிக்காரர்கள். சாட்சி பால்ராஜ்–உடன் இன்று நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன் என்றால் சரிதான். நான் ஊனமுற்றவர் என்பதினால் பால்ராஜ் என்னை அழைத்து வந்துள்ளார். அ.சா.2 ன் மகள் மாரிச்செல்வி என்பவருக்கு எப்போது திருமணம் நடந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது. நான் யாருடைய வீட்டிற்கு சம்பவ சமயத்தின் போது Fan மாட்டேன் வந்தேன் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். சம்பவ நடந்த இடம் ஒரு முடுக்கு சந்து என்றால் சரிதான். அந்த சந்திற்கு மேற்கு பக்கம் வழி எதுவும் கிடையாது என்றால் சரிதான். என்ன வகை அரிவாளைக் கொண்டு எதிரி அ.சா.2 ஐ தாக்கினார் என்று எனக்கு தெரியாது என்றால் புது அரிவாளைக் கொண்டு தாக்கினார். புது அரிவாளைக் கொண்டு எதிரி அ.சா.2 ஐ வெட்டியதாக நான் போலீஸ் விசாரணையில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். போலீஸ் விசாரணையில் ஆம்புலன்ஸை நான் தான் அழைத்தேன் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. எந்த மருத்துவமனையின் ஆம்புலன்ஸில் அ.சா.2 ஐ அழைத்து சென்றார்கள் என்று நான் போலீஸ் விசாரணையில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். நான் ஃபேன் மாட்ட சென்றது வசந்தன் என்பவரது வீடு. எதிரி அ.சா.2 ஐ வெட்டி விட்டு

எந்த திசையிலிருந்து எந்த திசையை நோக்கி சென்றார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் அதிமுக கட்சியை சேர்ந்தவர் என்றால் நான் பாரதிய ஜனதா கட்சியை சேர்ந்தவர். நான் அ.சா.2 மற்றும் அவரது சகோதரர் பால்ராஜ் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர்கள் எனது ஊரைச் சேர்ந்தவர்கள் என்பதினால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.2 அரிவாள்மனையால் காய்கறி நறுக்கி விட்டு, எழுந்திருக்கும் போது நிலை தடுமாறி திண்ணையில் உள்ள நிலை தலையில் பட்டு, கீழே விழுந்து அரிவாள்முனை பட்டு தான் காயம் ஏற்பட்டது என்றும், நான் அ.சா.1 முதல் அ.சா.3 கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

C KATHIRAVAN
Digitally signed by C KATHIRAVAN
Date: 2025.06.10 16:19:40 +0530